[திரு. வை. சிவபுண்ணியம்] [2009 பிப்ரவரி 24

நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, திருவாரூரிலிருந்து சென்னைக்கு இரயில் போக்குவரத்து இல்லை. அதை உடனடியாகச் செய்வதற்கு உரிய முயற்சியை இந்த அரசு எடுக்கவேண்டும். குறிப்பாக, என்னுடைய தொகுதியில், மன்னார்குடியிலே. . .

5. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (*25-2-2009*) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, *25-2-2009*, புதன்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, *25-2-2009* வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

நாளைக்கு, முதலில் செல்வி கே. பாலபாரதி அவர்களும், பின்பு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஓர் உறுப்பினர், காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஓர் உறுப்பினர், அ.தி.மு.க. சார்பாக ஓர் உறுப்பினர் பேசி, பின்பு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையாற்ற இருக்கிறார்கள்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(25-2-2009)* காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

56. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

26. மனுக்கள் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கை (2008-2009)

27. மனுக்கள் குழுவின் அறுபத்து ஆறாவது அறிக்கை (2008-2009)

28. மனுக்கள் குழுவின் அறுபத்து ஏழாவது அறிக்கை (2008-2009)

29. மனுக்கள் குழுவின் அறுபத்து எட்டாவது அறிக்கை (2008-2009)

30. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

31 உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)